

ALPHA MIND POWER™

"Power of the Subconscious Mind"

Newsletter

# FEBRUARY 2016

My Dear Alpha Siddha,

Writing to you with a lot of love and blessings. I am sure this letter will find you in good health and good cheer.

In this issue I wish to write about negative thoughts. I met a lady who came for counselling. She had a good life. A good affectionate husband who ran a shop. They had two children who were going to school. In fact, she had an ideal life. But, she was not happy! In fact, she was very unhappy. As she spoke to me, tears started flowing down from her eyes.

She explained how her thoughts were torturing her every day. She had negative thoughts all the time. If she sat down to eat her food, her mind asked her what is the point in eating. When she started cooking, her mind said her cooking was bad. When she wanted to eat fruits her mind asked her why should you eat fruits when others have no fruits to eat. Slowly thoughts of suicide also kept emerging. She was totally distraught and said she could not bear to live with herself. That is the power of our thought forms!

After talking to her for some time I told her that basically her mind energy had become low and hence she had become vulnerable to negative thoughts. Once you allow these thoughts to enter your mind, they have a way of occupying space in your mind. And then they start growing.

I explained to her the need to keep your thoughts positive. We can cancel each negative thought arising in our mind and replace it with a positive thought. She understood, but pleaded with me for help. She said in very simple words ' I cannot live with these thoughts any more. Please do something to change my thoughts. I am unable to be a good wife to my husband or a good mother to my children'.

This is a situation which many people face. They know that their thought forms are not right. They know that their thoughts have to change. But they are unable to make it happen. Even some of our Alpha Siddhas have come to me with this problem.

I prepared Alpha Music Therapy for this lady. In this one hour therapy affirmations that are required for a person reach the subconscious mind and create the necessary change. That lady listened to the music in our healing room. She had three sessions. At the end of that therapy, she emerged as a very happy person, with a smiling face and bubbling energy. She said she now felt as if a huge burden had been lifted from her shoulders. She could move on in life. There were no negative thoughts at all!

I am writing in detail about Alpha Music Therapy because I am seeing the effectiveness of this therapy again and again. Even alcoholism and smoking have disappeared with this treatment. This has become a wonderful tool to change our thought forms. Since it is customized for a person, it creates the required positive change in the mind of that person.

However strong a person is, there are times in life when the mind becomes a bit weak. That is when negative thoughts start building up in the mind. With meditation and affirmations we can certainly rectify this and bring our thought patterns back to track. But, sometimes we do need a little help.

I feel this wonderful tool should not be confined to our healing room. It should reach anyone who needs it. If you feel you need some positive change to be created in your mind, contact our office by phone or email and give the details of your requirements. Alpha Music Therapy will be prepared and sent to you by courier on a pendrive.

Let our thoughts always be pure! Our energy always positive!

Blessings,
Srimatha

***Join us on a Yatra to Rishikesh with our Guruji!***
*Date: 01.06.2016 to 05.06.2016*
*For Further details contact Alpha Mind Power Office*

அன்புள்ள ஆல்ஃபா சித்தரே,

மிகுந்த அன்புடன் ஆசீர்வாதங்களுடன் எழுதுகிறேன். இக்கடிதம் கிடைக்கும் சமயம் நீங்கள் நல்ல ஆரோக்கியத்துடன் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள் என்றும் நம்புகிறேன்.

இந்த முறை எதிர்மறை எண்ணங்கள் பற்றி எழுத விரும்புகிறேன். ஆலோசனைக்காக ஒரு பெண் என்னிடம் வந்திருந்தார். அவளது வாழ்க்கை நன்றாகவே அமைந்திருந்தது. நல்ல அன்பான கணவர். கடை வைத்திருந்தார். பள்ளிக்கு செல்லும் இரு குழந்தைகள். சொல்லப் போனால் மிக சிறப்பான வாழ்வே அவளுக்கு அமைந்திருந்தது. ஆனால் அவள் சந்தோஷமாக இல்லை! உண்மையில் அவள் மிகுந்த துக்கத்தில் இருந்தாள். பேசும் பொழுதே அவள் கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

தனது எண்ணங்களே தனக்கு எதிரியாக இருந்ததை சொன்னாள். நாள் முழுவதும் தீய எண்ணங்கள் அவளை தகித்தன. சாப்பிட உட்கார்ந்தால் அவள் மனம் சாப்பிட்டு என்ன பயன் என்று கேட்டது. சமைக்க துவங்கினால் உன் சமையல் சரியில்லை என்றது. பழங்கள் சாப்பிட முற்பட்டால் எத்தனையோ பேருக்கு இல்லாத பழங்கள் உனக்கெதற்கு என்றது. மெல்ல தற்கொலை எண்ணங்களும் தோன்றத் துவங்கின. தன்னால் நிம்மதியாக வாழ முடியவில்லை என்றாள். அதுதான் எண்ணங்களின் சக்தி!

அவளுடன் சற்று நேரம் பேசியபின் அவளுக்கு புரிய வைத்தேன். அவளது மனதின் சக்தி குறைந்து விட்டதால் எதிர்மறை எண்ணங்கள் தோன்றத் துவங்கி விட்டன. இந்த எண்ணங்களை மனதிற்குள் நுழைய விட்டால் அப்படியே அங்கு ஒரு இடத்தை பிடித்துக் கொள்ளும். வளரவும் துவங்கும்.

நமது எண்ணங்களை தூய்மையாக வைத்துக் கொள்வதன் அவசியத்தை அவளுக்கு விளக்கினேன். நமது மனதில் தோன்றும் ஒவ்வொரு தீய எண்ணத்தையும் அகற்றி அங்கு நல்ல எண்ணத்தை புகுத்த வேண்டும் என்பதையும் விளக்கினேன். அவள் புரிந்து கொண்டாள். ஆனால் அதன் பின்னரும் கெஞ்சினாள். “இந்த எண்ணங்களுடன் என்னால் இனி வாழவே முடியாது. எனது எண்ணங்களை மாற்ற ஏதாவது செய்யுங்கள். என்னால் என் கணவருக்கு நல்ல மனைவியாக இருக்க முடியவில்லை. எனது குழந்தைகளுக்கு நல்ல தாயாகவும் இருக்க முடியவில்லை”.

இது போன்ற சூழ்நிலை பலரது வாழ்வில் ஏற்படுவதுண்டு. தங்களது எண்ணங்கள் சரியில்லை என்பது தெரிந்தாலும் அவற்றை மாற்றிக் கொள்ள முடியாத நிலை. நமது ஆல்ஃபா சித்தர்கள் சிலருமே இது போன்ற பிரச்சினையை என்னிடம் சொன்னதுண்டு.

இந்த பெண்ணிற்காக ஆல்ஃபா மியுசிக் தெரபி தயாரித்தேன். இந்த ஒரு மணி நேர இசை சிகிச்சையில் அவருக்குத் தேவையான வாக்கியங்கள் அவரது ஆழ்மனதை சென்றடையும். அங்கு தேவையான மாற்றத்தையும் உருவாக்கும். அந்த பெண் ஆல்ஃபா அலுவலகத்தில் இதற்காகவே உள்ள அறையில் அந்த சிகிச்சையை பெற்றார். மூன்று நாட்கள் இந்த சிகிச்சையை எடுத்துக் கொண்டார். முடிவில் மிகுந்த சந்தோஷத்துடன் காணப்பட்டார். சிரித்த முகமும் பொங்கும் சிரிப்புமாக காணப்பட்டார். மிகப் பெரிய பாரம் தனது தோள்களை விட்டு நீங்கி விட்டது போல் உணர்வதாக தெரிவித்தார். இனி வாழ்வில் தன்னால் முன்னேறி செல்ல முடியும் என்றார். எதிர்மறை எண்ணங்களே இல்லை என்றும் கூறினார்!

இந்த இசை சிகிச்சையைப் பற்றி நான் இங்கு எழுதும் காரணம் இதன் பலனை பலரிடத்தில் மீண்டும் மீண்டும் நான் பார்த்து வருவது தான். குடிப் பழக்கம் புகை பிடிக்கும் பழக்கம் போன்றவை கூட இதன் மூலம் மறைந்து விடுகின்றன. நமது எண்ணங்களில் நல்ல மாற்றத்தை உருவாக்க இது ஒரு நல்ல கருவி என்பதை உணர முடிகிறது. ஒவ்வொருவருக்காகவும் தனிப்பட்ட முறையில் தயாரிக்கப் படுவதால் அவரவருக்குத் தேவையான மாற்றத்தை மனதில் உருவாக்குகிறது.

ஒரு மனிதர் எவ்வளவு சக்தி வாய்ந்தவராக இருந்தாலும் வாழ்வில் சில சமயம் மனம் சற்று தடுமாற்றம் அடைகிறது. அப்பொழுது தான் எதிர்மறை எண்ணங்கள் மனதில் தோன்றுகின்றன. தியானம் மற்றும் நல்வாக்கியங்கள் மூலம் இதை நாம் சரிசெய்து கொள்ள முடியும் என்றாலும் சில நேரங்களில் நமக்கு கொஞ்சம் உதவி தேவைப்படுகிறது.

பலரது வாழ்வில் நம்ப முடியாத மாற்றத்தை ஏற்படுத்திய இந்த சிகிச்சை நமது அலுவலகத்துடன் நின்று விடக்கூடாது என்பது எனது ஆசை. எல்லோருக்குமே இது கிடைக்க வேண்டும். உங்கள் மனதில் ஏதேனும் நல்ல மாற்றம் தேவை என்று தோன்றினால் நமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் தேவைகளை தொலைபேசி அல்லது இமெயில் மூலம் தெரிவியுங்கள். உங்களுக்கான ஆல்ஃபா மியுசிக் தெரபி தயாரிக்கப் பட்டு ஒரு பென்டிரைவில் உங்களுக்கு அனுப்பி வைக்கப் படும்.

என்றும் நம் மனதில் நேர்மறை எண்ணங்கள் உதிக்கட்டும்! எப்பொழுதும் நம்மிடம் நல்ல சக்தி மட்டுமே உருவாகட்டும்!

ஆசீர்வாதங்கள்,
ஸ்ரீமாதா


**குருஜியுடன் ரிஷிகேஷ் யாத்திரை!**

தேதி: 01.06.2016 முதல் 05.06.2016 வரை

மேலும் விவரங்களுக்கு ஆல்ஃபா மைண்ட் பவர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்



*Guruji with Alpha Siddhas at Amrut Siddhi workshop in Chennai*



*Guruji with Alpha Siddhas at Srividya workshop in Bangalore*

## *SRIVIDYA HOMAM HELD ON 26.01.2016 AT AMP OFFICE, CHENNAI*













**AMP வாட்ஸ்அப் குரூப்ஸ்**

AMP வாட்ஸ்அப் குரூப்கள் உருவாக்கப் பட்டு வருகின்றன. இதன் மூலம் சுலபமாக நாம் தொடர்பு கொள்ளவும் முக்கியமான செய்திகளை பகிரவும் முடியும். நீங்கள் ஏதேனும் குரூப்பில் இல்லாவிட்டால், உங்கள் மொபைல் நம்பரிலிருந்து +917358595493 என்ற நம்பருக்கு ஒரு வாட்ஸ்அப் செய்தி அனுப்பினால் நீங்கள் வாட்ஸ்அப் குரூப்பில் இணைக்கப்படுவீர்கள்

Watch Guruji's TV Programs!

Makkal TV : Saturday 9.00 am
Pothigai TV : Monday 1.30 pm

Watch Guruji's TV programs also on our Website

www.alphamindpower.net

**AMP Whatsapp groups!**

We are now creating AMP whatsapp groups so that we can communicate easily and you can also receive updates quickly. If you are not already in one of our groups, please send a whatsapp message to +917358595493. You will be added.

# FEEDBACK – அனுபவங்கள்

When I was on a pilgrimage my family in Dec 2015 I fell sick (stomach upset) and was admitted in a hospital at Trichy. After a scan we were informed that there was a gall bladder stone and surgery had to be done. Next day we proceeded to Mumbai. I kept visualizing that the gall bladder stone had disappeared. When the doctor in Mumbai did a new scan the report said 'no calcus/polyp seen in gallbladder'. I could not believe my eyes. I thank Guruji and Alpha. Gurujikku Ananthakodi Pranams!

***Alpha Siddha, Mumbai.***

I work for a private concern at Nungambakkam as a team leader. It is a high pressure job with long hours. I was always held responsible even when my junior made a mistake and it got escalated. I kept visualizing a promotion and also moving to another team. To my surprise, the same happened. On Dec 14, I have moved to a new team and will be promoted shortly. Thank you so much Guruji, God and all Alpha Siddhas.

***Ms. Mathi, Chennai.***

I am 30 years old and my marriage kept getting postponed because of a problem with my horoscope. I attended upto level 3 where Guruji explains how we can overcome the problems with planets with the help of chakra meditation. I practiced it regularly. What a miracle! Within 2 months my marriage was fixed with my area tharmakartha's son and the marriage took place the very next month. Chakra meditation helps us to energise the planets and solve all problems in our life. Thanks to Alpha &Guruji!

***Ms. Revathi, Tiruvannamalai.***

I have done all the Alpha classes and I practice meditation regularly. However, certain unpleasant incidents in my life have left their imprints in my mind at a very deep level. I was troubled by them very often. Sometimes even my meditation was disturbed when I remembered how badly my relatives treated me and my wife for no reason. Then, I consulted Guruji and took Alpha Music Therapy. Now, I feel at peace. All that pain has gone. I am able to forgive them and move on in life. This is what I was craving. Thanks to Alpha and Guruji!

***Alpha Siddha, Chennai.***

நான் குடும்பத்துடன் டிசம்பர் மாதத்தில் ஒரு யாத்திரை சென்றிருந்தேன். அப்பொழுது எனக்கு வயிற்று வலி ஏற்பட்டது. ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டேன். ஸ்கேன் செய்து பார்த்து பித்தப்பையில் கல் இருப்பதாகவும் அறுவை சிகிச்சை தேவையென்றும் சொன்னார்கள். அடுத்த நாள் மும்பைக்கு புறப்பட்டோம். நான் அந்த கல் கரைந்து விட்டது போல் தியானத்தில் பார்த்து வந்தேன். மும்பையில் டாக்டர் புதிதாக ஸ்கேன் எடுத்து பார்த்த போது எந்த கல்லும் இல்லையென்று ரிப்போர்ட் வந்தது. என் கண்களையே நம்ப முடியவில்லை. ஆல்ஃபாவுக்கு நன்றி குருஜிக்கு அனந்தகோடி நன்றி

ஆல்ஃபா சித்தர், மும்பை

நான் சென்னை நங்கம்பாக்கத்தில் ஒரு தனியார் நிறுவனத்தில் டீம் லீடராக பணியாற்றுகிறேன். பல மணி நேரம் வேலை. டென்ஷனும் மிக அதிகம். எனக்கு கீழ் இருப்பவர் செய்யும் தவறுகளுக்கு கூட நான் பொறுப்பாக்கப்பட்டேன். பணி உயர்வு கிடைத்து வேறு டீமுக்கு மாற்றம் கிடைப்பது போல் தியானத்தில் பார்த்து வந்தேன். நான் ஆச்சரியப்படும் வகையில் அப்படியே நடந்தது. கடந்த டிசம்பர் 14ம் தேதி வேறு டீம்முக்கு மாற்றப் பட்டு விட்டேன். பணி உயர்வும் விரைவில் கிடைத்து விடும். குருஜி, கடவுள் மற்றும் ஆல்ஃபா சித்தர்களுக்கும் நன்றி!

திருமதி மதி, சென்னை.

எனக்கு 30 வயதாகிறது. எனது ஜாதகத்திலிருந்த தோஷத்தால் என் திருமணம் தடைபட்டுக் கொண்டே வந்தது. நான் கட்டம் 3ல் கலந்து கொண்டேன். அதில் கிரக தோஷங்களை கூட சக்ரா தியானம் மூலம் எப்படி சரி செய்து கொள்ள முடியும் என்று குருஜி விளக்கினார். நான் தினமும் தியானம் பழகி வந்தேன். என்ன ஆச்சரியம்! 2 மாதங்களில் எனது திருமணம் நிச்சயம் ஆகி விட்டது!அடுத்த மாதம் திருமணமும் நடந்து விட்டது. சக்ரா தியானம் மூலம் கிரகங்களால் ஏற்படும் பிரச்சினைகளை கூட எதிர்கொள்ள முடிகிறது. ஆல்ஃபாவிற்கும் குருஜிக்கும் நன்றி!

திருமதி ரேவதி, திருவண்ணாமலை

நான் ஆல்ஃபாவில் எல்லா வகுப்புகளிலும் கலந்து கொண்டேன். தொடர்ந்து பயிற்சியும் செய்து வருகிறேன். இருந்தாலும் எனது வாழ்வில் நடந்த சில கசப்பான நிகழ்வுகள் மனதில் மிக ஆழமாக பதிந்து விட்டன. அந்த நினைவுகள் அவ்வப்பொழுது என்னை தொல்லை செய்து வந்தன. என்னையும் எனது மனைவியையும் காரணமின்றி சில உறவினர்கள் தவறாக பேசியதை நினைக்கும் பொழுது தியானம் கூட செய்யமுடியாமல் போனது. பின்னர் குருஜியின் ஆலோசனையின்படி ஆல்ஃபா மியுசிக் தெரபி எடுத்துக் கொண்டேன். மனதிலிருந்த வலி வெளியேறி விட்டது. இப்பொழுது நான் நிம்மதியாக இருக்கிறேன். அவர்களை மன்னிக்க முடிகிறது. வாழ்வில் அடுத்தது என்ன என்று முன்னேற்றத்தை யோசிக்க முடிகிறது. இதற்காகத்தான் என் மனம் ஏங்கியது. நன்றி குருஜி!

ஆல்ஃபா சித்தர், சென்னை